பிரசங்க இலக்கம்: 9 வேதப் பகுதி ஆதியாகமம் 6-9

# வரப்போகும் அழிவும் ஆண்டவரின் வாக்குத்தத்தமும்

உலக வரலாற்றின் மிகமுக்கிய சம்பவம் ஜலப்பிரளயத்தினால் உலகம் அழிவுற்றதாகும். ஆதியாகமம் 6 முதல் 9 வரையிலான அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் இச்சம்பவம் உண்மை என்பதனால், உலகின் பலவேறு பாகங்களில் வாழ்ந்த மக்களின் புராணக்கதைகளில் ஜலப்பிரளயத்தினால் உலகம் அழிந்ததைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் ஜலப்பிரளயத்தின்ால உலகம் அழிந்தது என்னும் விவரணம் புராணங்களில் இருப்பதற்கு காரணம், இத்தகைய சம்பவம் நடைபெற்றதை புராணங்களை எழுதியவர்கள் அறிந்திருந்ததே காரணமாகும். ஆதியாகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இச்சம்பவம் உண்மையாக நடைபெற்றது என்பதை இயேசுகிறிஸ்துவே குறிப்பிட்டுள்ளார் (மத்.24:38-39).

**அழிவுக்கான காரணம் (ஆதி.6:1-6).**

இப்பகுதியில் தேவகுமாரர் தேவதூதர்கள் அல்ல. ஏனெனில் அவர்களில் ஆண்-பெண் வேறுபாடோ, இனப்பெருக்கமோ இல்லை. தேவதூதர்கள் திருமணமுடிப்பதில்லை என்று இயேசுகிறிஸ்து தெரிவித்துள்ளமையால் (மத்.22:30), தேவதூதர் மனிதப் பெண்களின்மேல் ஆசைப்பட்டு அவர்களோடு உறவுகொண்டார்கள் என்னும் பாரம்பரிய யூத-கிறிஸ்தவ கருத்து தவறானதாகவே உள்ளது. இதைப்போல, தேவகுமாரர் பக்தியுள்ள சேத்தின் வம்சத்தினர் என்றும் மனுஷகுமாரத்திகள் பக்தியற்ற காயீனின் வம்சத்தினர் என்னும் பிற்கால கிறிஸ்தவ விளக்கமும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. இது உண்மை என்றால், சேத்தின் வம்சத்தில் சகலரும் ஆண்களாகவும் காயீனின் வம்சத்தில் சகலரும் பெண்களாகவும் இருந்திருக்கவேண்டும். இது நடைமுறையில் சாத்தியப்படும் காரியம் அல்ல.

இவ்வேதப் பகுதி, ஆதியாகமப் புத்தகத்தின் முதற்பகுதிக்கான முடிவுரையாக இருப்பதனாலும், தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மானிட வம்சத்தின் அழிவுக்கான காரணத்தைப் பற்றிய விவரணமாகவும் இருப்பதனாலும், ஆதியாகமத்தை எழுதியவர், தேவனுடைய சிருஷ்டிப்புச் செயலை அடிப்படையாகக் கொண்டு, அதாவது, தேவன் ஆதாமை மண்ணினால் உருவாக்கியமையால் ஆண்களைத் தேவகுமாரர் என்றும், ஏவாள் ஆதாமிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதியிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டமையால் பெண்களை மனுஷகுமாரத்திகள் என்றும் குறிப்பிட்டுள்ளார். எனினும், இங்கு சாதராண திருமணத்தைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை. “பெண்களைத் தெரிந்து கொண்டார்கள்” என்பது திருமணத்தைக் குறிப்பிடும் விவரணம் அல்ல. மூலமொழியில் இவ்வாக்கியம், “அவர்களுக்குள்ளே தங்களுக்கு விருப்பமான பெண்களையெல்லாம் எடுத்துக் கொண்டார்கள்” என்றே உள்ளது. புதிய மொழிபெயர்ப்பில், “தாங்கள் தேர்ந்து கொண்டவர்களையெல்லாம் மனைவியர் ஆக்கிக்கொண்டனர்” என்று உள்ளது. ஒருவன் தான் விரும்பிய பெண்கள் யாராக இருந்தாலும், (சொந்த மகள், இன்னுமொருவனுடைய மனைவி, சிறுமி) அவர்கள் அனைவரையும் தங்களுடையவர்களாக்கிக் கொண்டனர். இயேசுகிறிஸ்துவும் நோவாவின் காலத்தைப் பற்றி குறிப்பிடும்போது, இத்தகைய ஒரு நிலையைப் பற்றியே கூறினார் (மத்.24:38-39). மனிதருடைய ஒழுக்கக்கேடான வாழ்க்கை முறையே தேவ தண்டனைக்கான காரணமாக இருந்தது.

**ஆண்டவரின் காருண்யம் (ஆதி.6:8-9)**

மானிட பாவத்திற்காகத் தேவன் மனுக்குலத்தை அழிக்கமுற்பட்ட காலத்தில் “நோவா” என்னும் மனிதனுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது (ஆதி.6:8). அவன் நீதிமானாகவும் தேவனோடு வாழ்பவனாகவும் இருந்தான் (ஆதி.6:9). நோவா தன்னுடைய கால மக்களுடைய வாழ்க்கை முறையைப் பின்பற்றவில்லை. அவன் தேவனுடைய வார்த்தையின்படி வாழ்ந்து வந்தான். நம்முடைய நிலைமை எப்படி இருக்கின்றது? நாம் தேவனுடைய கட்டளைகளையா அல்லது உலகத்தின் வாழ்க்கை முறையையா எதனைப் பின்பற்றுகின்றோம்?

கிருபை என்பது பெறத்தகுதியில்லாததைப் பெற்றுக்கொள்வது. நோவா நீதிமானாக இருந்ததினால் தேவகிருபை அவனுக்கு கிடைத்தது என்றால், கிருபை அர்த்தமற்றதாக இருக்கும். மேலும் "பாவம் பெருகும் இடத்திலேயே தேவனுடைய கிருபை பெருகும்" என்று வேதம் கூறுகிறது (ரோ.5:20). உண்மையில், தேவன் அக்காலப் பாவிகள் அனைவர்மீதும் கிருபைகூர்ந்தார். இதனால்தான் அவர்களை அழிக்கத் தீர்மானித்தும் 120 வருஷங்கள் அவர்கள் மனந்திரும்பி வருவதற்கு அவர்களுக்கு அவகாசம் கொடுத்தார். (ஆதி.6:3- இவ்வசனத்தில் "போராடுவதில்லை" என்பது மூலமொழியின்படி "இருப்பதில்லை" என்று மொழிபெயர்க்கப்படவேண்டும்). தேவன் நோவாவின் மூலமாக வரவிருக்கும் அழிவையும், மனிதர் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பவேண்டியதன் அவசியத்தையும் அறிவித்த வந்தார். எனவே, 120 வருஷங்களாகத் தேவன் சகல மக்கள் மீதும் கிருபையாக இருந்தார். ஆனால் நோவாவுக்கு இதைவிட அதிக கிருபை கிடைத்தது. தேவன் அவனைத் தம்முடைய செய்தியாளனாகவும், தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவதில் (ஜலப்பிரய அழிவிலிருந்து உயிரினங்களைக் காப்பாற்றுவதில்) ஒரு பங்காளனாகவும் ஏற்படுத்தியிருந்தார்.

தேவன் நம் ஒவ்வொருவர் மீதும் கிருபையாக இருக்கின்றார். இதனால், பாவிகளான நமக்கு அவர் கொடுக்கவேண்டிய தண்டனையைக் கொடுக்காமல் நம்மை இம்மட்டும் உயிரோடு வைத்துள்ளார். எரேமியா கூறியதுபோல நாம் நிர்மூலமாகாதிருக்கிறது தேவனுடைய கிருபையே (புலம்.). எனினும் நாம் எல்லோரும் மனந்திரும்பி அவரிடம் வரவேண்டும் என்பதற்காகவே தேவன் பாவத்தினால் நிறைந்திருக்கும் இவ்வுலகத்தை இன்னும் அழிக்காமல் பொறுமையாக இருக்கின்றார் (2பேது.3:9-14). நாம் மனந்திரும்பி அவரிடம் வருவதற்கு இன்னுமொரு புதிய வருடத்தைத் தந்துள்ளார்.

**அழிவிலிருந்து காக்கப்படுதல் (ஆதி.6:10-8:22)**

தம்மை விசுவாசித்த நோவாவையும் அவன் குடும்பத்தினரையும் ஏனைய உயிரினங்களையும் தேவன் காப்பாற்றினார். நோவா தேவனுடைய ஒழுக்கச் சட்டத்தின்படி வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரு மனைவி மட்டுமே இருந்தாள். அவனுடைய பிள்ளைகளும் தம் கால மக்களுடைய வாழ்க்கையை அல்ல, தம் பெற்றோரின் முன்மாதிரியைப் பின்பற்றினார்கள் (ஆதி.6:18, 8:16).

நோவா தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதன்படி வாழ்ந்துவந்தான் (ஆதி.8:22). இதனால் அவன் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டான் (எபி.11:7). நோவா தன் கண்களினால் காணாததை (அதாவது மழையையும் பிரளயத்தையும்) தேவன் சொன்னதன் நிமித்தம் நம்பினான். அவன் பேழையைக் கட்டியதும், உயிரினங்களைப் பேழைக்குள் கொண்டு வந்ததும் அவன் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தற்கான ஆதாரமாக உள்ளன.

நோவாவின் காலத்தில், தேவன் உலகத்தை அழிக்கத் தீர்மானித்துப் பொறுமையாயிருந்த 120 வருஷங்களில் நோவா கட்டிய பேழையே, வரவிருக்கும் அழிவிலிருந்து உயிரினங்களைக் காப்பாற்றக்கூடிய ஒரேயொரு இடமாக இருந்தது. தற்காலத்தில் தேவன் நோவாவின் காலத்தைவிட அதிக பொறுமையாக இருக்கின்றார். இக்காலத்தில் இயேசுகிறிஸ்து மட்டுமே வரவிருக்கும் அழிவிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் பேழையாக இருக்கின்றார் (1தெச.1:10). நோவுக்கு காத்தருடைய கண்களில் கிருபை கிடைத்ததுபோல இன்று நமக்கும் கிடைத்துள்ளது. இதனால் உலகத்தின் அழிவு நமக்கு வேதாகமத்தின்மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நோவாவைப்போல, மக்களை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக இயேசுகிறிஸ்து என்னும் பேழைக்குள் அழைத்துக் கொண்டுவரவேண்டியது நமது பொறுப்பாக உள்ளது.